**19.11.2025.** CC. 79/2011 PW.1 திருமதி. ஜெனி விமலா

**கடந்த 05.01.2018 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற Crl.M.P. No. 508/2019, dated 17.09.2019 ன் படி குவிமுச 1973 பிரிவு 311 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னை திருமணம் செய்வதற்கு முன்பே அவர் கேரளாவில் கூலி வேலைச் செய்வது எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் அவரை திருமணம் செய்தேன் என்றால் சரிதான்.

2. நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் சொன்ன நகை, பணத்தைப் பொறுத்து நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தந்தையிடம் நேரடியாக கொடுத்தேனா என்றால் ஆம் நான் தான் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் மற்றும் விசாரணை வாக்குமூலத்தில் மேற்படி பணத்தை நான் கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் ஆம் சொல்லியுள்ளேன். திருமணம் முடிந்து 2, 3 மாதங்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீட்டில் தான் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான்.

3. அதன் பிறகு ஆரல்வாய்மொழியில் வாடகை வீட்டில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். அதன் பிறகு என் மாமியார் வீட்டில் சிறிது காலம் தங்கிவிட்டு பின்னர் குருந்தன்கோட்டில் வீடு வாடகை எடுத்து இருந்தோம் என்றால் சரிதான். அதன்பிறகு கருத்து வேறுபாடு ஏற்பட்டு நாங்கள் பிரிந்திருந்து அப்போது நாகர்கோவில் குடும்பநல நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் விவாகரத்து வழக்கு ஐ.டி.ஓ.பி 212/2006 தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

4. மேற்படி வழக்கில் நாங்கள் சமாதானமாக சென்றால் மேற்படி வழக்கு பின்வாங்கப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு நாங்கள் இருவரும் சேர்ந்து தான் வாழ்ந்தோம் என்றால் சரிதான். எனது கணவர் சென்னையில் வேலைச் செய்து வந்த காரணத்தினால் சென்னையில் வீடுஎடுத்து தங்கினோம் என்றால் சரிதான். அதன் பிறகு அவர் வேலைக்கு பல ஆட்களை வைத்து வேலைச்செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதியை வழக்கிற்காக உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. மேற்படி சென்னையில் இருந்த காலகட்டங்களில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் பணிநிமித்தமாக ஊருக்கு வந்தது நான் யாரிடமும் செல்லாமல் என் அம்மா வீட்டிற்கு

வந்தேன் என்றால் சரியல்ல. நான் ஊரிலிருந்து வந்த மறுநாள் 12.08.2009 அன்று குற்றம் சுமத்தப்பட்ட நபர் சென்னைக்கு வந்துப்பார்த்தபோது நான் அந்த வீட்டில் இல்லாத காரணத்தினால் அவர் குளச்சலுக்கு வந்து 18.09.2009 ம் தேதி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் மனைவியையும் குழந்தையையும் சேர்த்து வைக்க சொல்லி மனுக்கொடுத்தாரா என்றால் ஆம் கொடுத்தார். அது சம்மந்தமாக விசாரித்தார்களா - ஆம் விசாரித்தார்கள்.

6. அதன்பிறகு தான் நான் குளச்சல் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 21.09.2009 ம் தேதி புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அதில் குற்றம் சுமத்தப்பட்ட நபரை அழைத்து விசாரித்தார்களா என்றால் ஆம் விசாரித்தார்கள். போலீசார் எங்கள் இருவரையும் சேர்ந்து வாழ்வதற்கு அறிவுரை சொன்னார்களா என்றால் ஆம். அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அவர் தான் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற சங்கதியை வழக்கிற்காக உண்மைக்கு மாறாக சொல்கிறேன்என்றால் சரியல்ல.

7. நான் கொடுத்த புகார் மனு மீது போலீசார் வழக்குப்பதிவுச் செய்தார்களா என்றால் - ஆம். அதன்பிறகு என்னை போலீசார் அந்த புகார் மனு சம்மந்தமாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தவிர்த்து வேறு எந்த சங்கதிகளையும் புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணை சாட்சியத்தில் சொன்ன சங்கதிகளின் படி குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னை கொடுமை செய்யவில்லை என்றாலும், அன்பாக தான் பார்த்துக்கொண்டார் என்றாலும், என்னுடைய பெற்றோர் மற்றும் சகோதரர்களும் சேர்ந்துக்கொண்டு அவர்களுடைய சுயலாபத்திற்காக நான் வாழ்ந்துக்கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான்சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு,
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட
நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.